தமிழ்நாடு அரசு

# கைத்தறி மற்றும் துணிநூல் துறை

**Notification No.1/2019/Q2** **dated: 02.09.2019**

சென்னை, கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அலுவலகத்தில் காலியாக உள்ள ஏழு அலுவலக உதவியாளர் பணியிடங்களை நிரப்பும் பொருட்டு, தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பதவியின் பெயர் | வகுப்பு | அதிகபட்ச வயது | காலி பணியிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகுதி மற்றும் சிறப்புத் தகுதி | ஊதிய விகிதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | அலுவலக உதவியாளர் | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 32 | 2 | 8–ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் மிதி வண்டி ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும் | ரூ.15,700 – 50,000 (Level–1) |
| | | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்கள் தவிர) | 32 | 2 | | |
| | | பொதுப்போட்டி | 30 | 2 | | |
| | | ஆதிதிராவிடர் | 35 | 1 | | |

**மேற்காணும் காலிப்பணியிடமானது இனச்சுழற்சி அடிப்படையிலானது.**

1. விண்ணப்பதாரர்களின் குறைந்தபட்ச வயது 18 ஆகும். அதிகபட்ச வயது **கலம் எண். 4–ல்** குறிப்பிட்டுள்ளவாறு ஆகும் **(01.08.2019** அன்று உள்ளபடி).
2. மாற்றுத்திறனாளிகளுக்கு 10 வருடம் உச்ச வயது வரம்பில் கூடுதலாக வழங்கப்படும்.
3. விண்ணப்பங்களை, **கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அலுவலகம், குறளகம், 2–ம் தளம், சென்னை – 108** என்ற முகவரியில், அலுவலக நேரங்களில் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.
4. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய இணைப்புகளுடன் **கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், குறளகம், 2–ம் தளம், சென்னை –108** என்ற முகவரிக்கு **23.09.2019 பி.ப. 5.45 மணிக்குள்** பதிவுத் தபாலில் கிடைக்குமாறு அனுப்பிட வேண்டும். அல்லது நேரில் ஒப்படைக்க வேண்டும். மேல் உறையின் மீது **"அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கான விண்ணப்பம்"** என பெரிய எழுத்துக்களில் தவறாது குறிப்பிட வேண்டும்.
5. இப்பணியிடத்திற்கு பெறப்படும் விண்ணப்பங்களின்படி தகுதியான நபர்கள் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்படும் காத்திருப்போர் பட்டியலில் உள்ள நபர்களும் நேர்காணலுக்கு அழைக்கப்பட்டு, நேர்காணல் அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்படுவர்.
6. தகுதி இல்லாத நபர்களின் விண்ணப்பங்களும், **23.09.2019 பி.ப. 5.45** மணிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும், சரிவர பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும், உரிய சான்றாவணங்கள் இல்லாத விண்ணப்பங்களும் ஏற்கப்படமாட்டாது.
7. விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் நகல்களை (அரசு / அரசு சார்ந்த அமைப்பு வழங்கியவை) தானே சான்றொப்பமிட்டு (Self Attested) இணைத்து அனுப்ப வேண்டும்.
   - அ. கல்விச் சான்றிதழ்
   - ஆ. வயது – வயது குறிப்பிடப்பட்ட கல்விச் சான்றிதழ் / அரசு சார்ந்த அமைப்பு வழங்கிய பிறப்புச் சான்றிதழ்.
   - இ. சாதிச் சான்றிதழ்
   - ஈ. முன்னுரிமைச் சான்றிதழ்
   - உ. இருப்பிடச் சான்றிதழ்
   - ஊ. குடும்ப அட்டை
   - எ. பணி முன் அனுபவச் சான்றிதழ். (ஏதேனும் இருப்பின்)
   - ஏ. அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடமிருந்து (Gazetted Officer) விண்ணப்பதாரரின் புகைப்படத்துடன் கூடிய நன்னடத்தை சான்றிதழ், புகைப்படமும் சான்றொப்பம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.
   - ஐ. வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பதிவு அட்டை.
   - ஒ. இதர சான்றிதழ்கள்.
   - ஓ. மாற்றுத்திறனாளியாக இருப்பின் அதற்கான சான்றிதழ்.
8. இப்பணி நியமனத்திற்கான நேர்காணல் மற்றும் அது தொடர்பானவற்றை மாற்றியமைப்பதற்கும், நிறுத்தி வைப்பதற்கும், இரத்து செய்வதற்கும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு முழு அதிகாரம் உண்டு.

செ.மு.தொ. இ./960/வரைகலை/2019

**உதவி இயக்குநர் (நிர்வாகம்), கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரகம், சென்னை–108.**